*அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2005(II)*

எனது இல.ஆ/7/4/1/22

அரசாங்க நிர்வாக
உள்நாட்டலுவலர்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

23ஆம் திகதி டிசம்பர், 2005.

அமைச்சின் செயலாளர்கள்,
மாகாண சபையின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்.

**2005 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் பிரேரிக்கப்பட்டவாறு, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான புதிய (அக்ரா ஹரா) காப்புறுதித் திட்டத்தினைத் தயாரித்தல்**

2005.05.18 ஆம் திகதியதும் 12/2005 ஆம் இலக்கமிடப்பட்டதும் 12/2005(1) ஆம் இலக்கமிடப்பட்டதும் 2005.07.22 ஆம் திகதியதும் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையானது 2005 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் பிரயோகிக்கப்பட்டவாறு புதிய காப்புறுதித் திட்டத்தினை தாபிக்கும் பொருட்டு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

**05. தவணைக் கட்டணம் செலுத்துதல்**

1. அரசாங்க சேவை, மாகாண அரசாங்க சேவை என்பவற்றில் உள்ள சகல உத்தியோகத்தர்களும் மற்றும் அரசாங்க சேவையில் இருந்து வேறு சேவைகளுக்கு தற்காலிக அடிப்படையில் முறையான வகையில் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் இந்தக் காப்புறுதித் திட்டத்தின் பங்களிப்பில் இணைவது கட்டாயமானதாகும். அவர்களுடைய மாதாந்தச் சம்பளத்தில் இருந்து ரூபா 75/- கழிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும் என்பது இதன் நோக்கமாகும்.

**06. நன்மைகள்**

மேலே குறிக்கப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இன் பிரிவுகள் 08, 10 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட மருந்துவக் காப்புறுதி நன்மைகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 08 | அரசாங்க வைத்திய சாலையில் அல்லது ஆயுர்வேத வைத்திய சாலையில் சிகிச்சைக்களத்தில்(வாட்டில்) தங்கியிருந்து சிகிச்சை பெறுமிடத்து குடும்ப அங்கத்தவர் உட்பட்ட அனைவருக்கும் நாள் ஒன்றுக்கு பின்வரும் கொடுப்பனவைப் பெறுவதற்கு உரித்துண்டு. | (வரையறுக்க பட்டது)<br>(நாள் ஒன்றுக்கு) | ரூ.5000/-<br>ரூ. 500/- |
| 10. | அரசாங்க வைத்திய சாலையில் அல்லது தனியார் வைத்திய சாலையில் பகுதி I, II இன் கீழ் குறிப்பிடப்பட்ட சத்திர சிகிச்சை தொடர்பிலான நன்மைகளை வழங்குதல். | | |

07. காப்புறுதித் திட்டத்தின் கீழ் நன்மை பெறுதல்.

01. ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அல்லது விபத்து ஏற்பட்டு அல்லது இயற்கை மரணம் எய்தி இருக்கமிடத்து 14 நாள்களுக்குள் திணைக்களத் தலைவர் அதுபற்றி அறியத்தருதல் வேண்டும். மருத்துவம் தொடர்பானதும் வைத்தியசாலை அறவீடுகள் தொடர்பானதும் ஆன அனைத்துப் பற்றுச்சீட்டுக்களும் (பில்) விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் 90 நாள்களுக்குள் திணைக்களத் தலைவருடாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் தலைமையகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

02. உரிமை கோருவதற்காகவும், நடவடிக்கை எடுப்பதற்காகவும் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவங்கள் 2005.01.01 ஆம் திகதியில் இருந்து 2005.11.30 ஆம் திகதி வரையான காலப்பகுயில் ஏற்படுகின்ற தாமதங்களை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது கவனத்திற் கொள்ளாது.

ஒப்பம்/டீ.திசாநாயக்க
செயலாளர்,
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு.